THE HON. SRI M. A. MANICKAVELU : வாக்குக் கொடுத்தார்கள் எனச் சொல்லும்போது இப் பிரச்சனையைக் கவனிப்பதாகத்தான் அவர்கள் சொல்லி இருக்கலாம். மூவர் கமிட்டி யோசனையை அப்படியே உத்திரவு ஆக்கிவிடுகிறோம் எனச் சொல்லியிருக்கமாட்டார்கள். இப்பிரச்சனை இப்பொழுது கவனிக்கப்பட்டுவருகிறது.

SRI P. G. MANICKAM : இந்த மூவர் கமிட்டியின் அறிக்கை என்ன என்பதை அறிய பொது ஜனங்கள் மிக்க ஆவலாக இருக்கிறார்கள். ஆகையால் அதை அடுத்த கந்தாய வருஷத்திற்குள்ளாவது தெரிவிக்க சர்க்கார் முயற்சிப்பார்களா?

THE HON. SRI M. A. MANICKAVELU : கூடிய சீக்கிரமே அதைத் தெரிவிப்பார்கள் என்று நான் நம்புகிறேன்.

Disputes in Textile Mills in Coimbatore

* 279 *Q.*—SRI K. P. GOPALAN : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether the Government have taken any conciliation proceedings in the dispute between the Mill Workers' Union, Coimbatore, and the managements of textile mills in Coimbatore regarding the salary, dearness allowance and work-load; and

(*b*) if so, the result of the proceedings?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes, Sir.

(*b*) The conciliation proceedings have not yet been concluded.

SRI N. K. PALANISAMY : It was reported in the newspapers a few days back that a settlement between the workers and the management with regard to wages, work-load, etc., was arrived at in the presence of the Hon. Minister for Agriculture. May I know whether it is a fact?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : There was no settlement before me. But I had a talk with the representatives of the various parties—management and the various unions—and subsequently I heard from the Commissioner of Labour that they had come to a settlement on most of the points. But I have not had a report on that from the Commissioner of Labour.

SRI K. T. RAJU : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த செட்டில் மெண்டில் கனம் தொழில் அமைச்சர் அவர்கள் கலந்துகொண்டு உதவி செய்ததற்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறோம் என்பதாக அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆகவே இது விஷயம் தொழில் அமைச்சர் அவர்களுக்கு எல்லாம் தெரியும் என்று நினைக்கிறேன். அது உண்மைதானா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நான் பேசியதன் விளைவாக முடிவு ஏற்பட்டதாய் இருந்தால் எல்லாத் தொழிலாளர்களும், பிரதிநிதிகளும் தெரிவித்துக்கொள்கின்ற பாராட்டுதலிலும், மகிழ்ச்சியிலும் கனம் அங்கத்தினர் அவர்களும் கலந்து கொள்வார்கள் என்று நான் நினைக்கிறேன்.